குறள் வெண்பா நூற்கோவை

(முதற் பகுதி)

★

சிவசிவ வெண்பா
திருத்தொண்டர் வெண்பா
வள்ளுவர் நேரிசை
வடமலை வெண்பா
தினகர வெண்பா

ஆகிய

ஐந்து வெண்பா நூல்களின் தொகுப்பு
விளக்கக் குறிப்புரைகளுடன்

★

கழக வெளியீடு

கழக வெளியீடு : கஉகூஅ

குறள் வெண்பா நூற்கோவை

விளக்கக் குறிப்புரையுடன்

(முதற் பகுதி)

ஐந்து குறள் வெண்பா நூல்களின்
தொகுப்பு

★

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி-6. சென்னை-1.

1967

Ed I August 1967

O31,1C5
K31k71-1

KURAL VENBA NOORKKOVAI

Novel Art Printers, Madras-14.

Title From printed at appar Achakam Madras-1.

பதிப்புரை

செம்பொருட் டுணிவினராம் திருவள்ளுவ நாயனர் தோலாநாவின் மேலோராகிய தொல் தமிழர் தம் தூய உள்ளத்தினின் றருளுணர்த்த வெளிப்போந்து நிலவுகின்ற தென்னுட்டுச் செந்நெறியினை முன்னெறியாகக் கொண் டொழுகிய மூவாத் தவத்தர். அவர்தம் தெய்வத் தமிழ் மறை உலகப் பொதுமறை.

இதன் தெய்வப்பெற்றி நோக்கி அனைத்துலகத் தாரும் ஆர்வமொடு தத்தம் மொழிகளில் மொழிபெயர்த்து உச்சிமேற்கொண்டு ஒழுகிவருகின்றனர். அம்முறையில் தமிழ் கூறும் நல்லுலகத்து வாழும் தமிழ்ச் செல்வர் தத்தம் நூலகத்துக் கருத்தாகவும், சொல்லாகவும், சொற் றொடராகவும், ஒப்பாகவும், ஆணையாகவும் அமைத்து ஆண்டு அகமிக மகிழ்ந்து அவ்வழியொழுகி உலகோரை யும் ஒழுகும்படி செய்துள்ளனர்.

மேலும் திருக்குறள் முழுவதையும் அடைவே எடுத் தாண்டு அதன் விளக்கமாக அமையும் பலவேறு எடுத்துக்காட்டுக்களை வெண்பா யாப்பான் அமைத்து இணைத்து முழு வெண்பாவாக்கி மூதுலகுக்கு வழங்கி யுமுள்ளனர். அத்தகைய நூல்களும் பல்வேறு காலத்து எழுந்தனவாகும். அவற்றுள் பெரிதுமுயன்று அரிதிற் கிடைத்தனவற்றைக் "குறள் வெண்பா நூற்கோவை" என்னும் பெயருடன் பல பகுதிகளாக வெளியிட மேற் கொண்டுள்ளோம்.

அம்முறையில் முதற் பகுதியாக இந்நூல் வெளி வருகிறது. இதன்கண் "சிவ சிவ வெண்பா" முதல் "தினகர வெண்பா" முடிவாக ஐந்து நூல்கள் அடங்கி யுள்ளன. அவற்றின் சிறப்புக்களும் பிறவும் அவ்வவற்றின் முன்னுரையில் விளக்கமாகத் தரப்பட்டுள்ளன.

மற்றுள்ள குறள் வெண்பா நூல்கள் இரண்டாம் பகுதியாகத் தொடர்ந்து வெளிவரும்.

வெண்பாக்களின் கதை விளக்கமும் வேறு பல குறிப்புக்களும் சேர்த்துக் கழகப் புலவர், சித்தாந்த பண்டிதர் திரு. ப. இராமநாத பிள்ளை யவர்களைக் கொண்டு எழுதுவித்த, "விளக்கக் குறிப்புரை"யுடன் வெளி வருகின்றது.

முன்னர் குறள் முதுமொழி வெண்பா நூற்கொத்து என்ற தலைப்பில் சோமேசர் முதுமொழி வெண்பா, முருகேசர் முதுநெறி வெண்பா, இரங்கேச வெண்பா (நீதிசூடாமணி) ஆகிய மூன்று நூல்களையும் உரையுடன் வெளியிட்டுள்ளோம். என்பதும் ஈண்டு அறியற்பாலது.

இவை திருக்குறள் பயில்வார்க்கும் தமிழகப் பண் பாட்டினை ஆய்வார்க்கும் பெருந்துணை புரிவனவாகும். மற்றப் பகுதிகளும் தொடர்ந்து வெளிவரும். இதனைத் தமிழகம் பெற்று நன்மை எய்துமாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்

உள்ளுறை

---

* நூலாசிரியர் பெயர் தெரியவில்லை

குறள் வெண்பா நூல்-க.

சென்னமல்லையர்

இயற்றிய

சிவசிவ வெண்பா

முன்னுரை

திருக்குறளை அமைத்து வெண்பாவாக இயற்றப்பட்ட நூல்கள் சினேந்திரவெண்பா, இரங்கேசவெண்பா, தினகர வெண்பா, வடமலைவெண்பா, திருமலைவெண்பா, முதுமொழி மேல் வைப்பு, சோமேசர் முதுமொழிவெண்பா, திருத் தொண்டர்மாலை, வள்ளுவர் நேரிசை, முருகேசர் முதுநெறி வெண்பா, திருக்குறட் குமரேசவெண்பா, சிவசிவ வெண்பா என்பனவாம்.

சிவசிவவெண்பா என்னும் நூலை இயற்றியவர் சென்ன மல்லையர் என்னும் வீரசைவப்புலவர். இவர் சிதம்பரத் திலேயுள்ள பச்சைக்கந்தையர் மடத்தைச் சேர்ந்தவர். சிவபெருமானிடத்திலே அன்புடையவர். இவர் திருக் குறளின் 133 அதிகாரங்களினும் இருந்து நூற்று முப்பத்து மூன்று திருக்குறள்களையெடுத்து அக்குறளின் பொருளை விளக்கத்தக்க கதைகளை முன்னிரண்டடிகளினும் அமைத்து இடையே சிவசிவா என்பதைச் சேர்த்து நூற்றுமுப்பத்து மூன்று பாடல்களால் நூலை முடித்துள்ளார். சிவசிவா என்பதையே நூலின் பெயராக அமைத்து நூலுக்குச், 'சிவசிவ'' வெண்பா என்று பெயர் கொடுத்துள்ளார். இவருடைய வாக்கு இனிமையானதாகவும் எளிமையான தாகவுந் திகழ்கின்றது. சோமேசர் வெண்பா, முருகேசர் வெண்பா முதலியன இந்நூலுக்குப் பிற்பட்டெழுந்தன வாகும்.

இவர் அரிச்சந்திர புராணம், அருணாசல புராணம் இராமாயணம், உபதேச காண்டம், கந்த புராணம், சத கண்ட சரித்திரம், சிதம்பர புராணம், சிவபுண்ணியத் தெளிவு, செவ்வந்திப் புராணம், ஞானவாசிட்டம், தண்ட

காரணிய மகிமை, திருவாதவூரர் புராணம், திருவாலவா யுடையார் திருவிளையாடற் புராணம், திர்த்தகிரிப் புராணம் நைடதம், பாகவதம், பிரமோத்தர காண்டம், பெரிய புராணம், விருத்தாசல புராணம் முதலிய நூல்களிலிருந்து மேற்கோட் கதைகளையெடுத்துக் கையாண்டுள்ளார்.

இவர் வீரசைவராகவிருந்தும் வைணவ சமய நூல்களை யும் கற்றவர் என்பது எல்லா நூல்களிலிருந்தும் விளக்கக் கதைகள் எடுத்துள்ளமையின் பெறப்படுகின்றது. இவர் இந் நூலை இயற்றிய காலம் ஆங்கிலம் 1767, 8 என்பது சிறப்புப்பாயிரத்தால் விளங்குகின்றது.

இந்நூலிறுதியில் கதைக் குறிப்பும், சொற்பொருளும் சேர்க்கப் பெற்றிருக்கின்றன.

சு. அ. இராமசாமிப் புலவர்.

சிறப்புப் பாயிரம்

ஆயிரத் தறுநூற் றெண்பது பத்தாம்
ஆண்டுசெல் சகாப்தநா ளதனில்
மாயிரு ஞாலத் ததிகமாந் தில்லை
மன்றில்வாழ் சென்னமல் லையர்
பாயிருள் துரக்கும் பரிதிபோற் பாவப்
படரகற் றிடுஞ்சிவ வெண்பாத்
தீயவை போக்கிப் பரகதி சேரச்
செப்பினன் தெளிதவத் தவர்க்கே.

———

உ

திருச்சிற்றம்பலம்

சிவசிவ வெண்பா

காப்பு

தெள்ளுலக நீதி சிவசிவா என்றுதிரு
வள்ளுவர்வெண் பாவால் வழுத்துறளற்—குள்ளதுணை
கந்தனிலீ ராருன கைமே வியகருணைத்
தந்திமுகன் செம்பதுமத் தாள்.

அவையடக்கம்

சிவசிவவென் ஷேருதுவரிச் செய்யுட் டிறங்தேர்ந்து
எவர்களுமென் றஞ்சா திசைத்தேன்—கவிஞரியற்
பண்பா லுரைத்த பழமொழிமுன் னீதுமொரு
வெண்பாநூ லாய்விளங்க வே.

உதாரணங்கள் கூறவேண்டுமென்பது

ஆதிமுதல் வள்ளுவர்சொல் லாரணமாஞ் செந்தமிழ்கொண்
டோதுதமிழ்க் கோது முதாரணங்கள் - வேதமெனும்
காரணத்தாற் பாரதத்தைக் கன்மீதி லேபொறித்த
வாரணத்தின் தாட்டா மரை.

கடவுள் வாழ்த்து

விற்பிரம்பா லுற்றவடு மேவவுல கெங்குநிறை
சிற்பரனே தெய்வஞ் சிவசிவா—சொற்சிறந்த
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. 1

வான் சிறப்பு

பூமலர்கோ ணேரியற்கும் பூவையர்க்கும் பூமழைசெய்
தீமைநலங் கண்டோஞ் சிவசிவா—பூமுற்
கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றுங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை. 2

நீத்தார் பெருமை

நல்லசுக ருக்கன்றி நாணுவதென் வேதமுனி
செல்ல மடவார் சிவசிவா—சொல்லின்
உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர் வித்து. 3

அறன்வலியுறுத்தல்

எய்தருமம் பாலுயிர்நீத் தெய்துபொழு துங்கருணன்
செய்தரும மீந்தான் சிவசிவா—உய்யுநெறி
அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை. 4

இல்வாழ்க்கை

எய்து சவுபரிக்கன் றின்றமக ளாரைமணஞ்
செய்யவர சீந்தான் சிவசிவா—துய்யதவத்
தாற்றி னொழுக்கி யறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து. 5

வாழ்க்கைத்துணைநலம்

சத்தியந்தப் பாமலரிச் சந்திரற்குச் சந்த்ரமதி
சித்தமொரு மித்தாள் சிவசிவா—புத்தியுடன்
தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். 6

புதல்வரைப் பெறுதல்

மறலி செயன்மாற்றி வயதரனாற் பெற்ற
திறன்மகப் பேருஞ் சிவசிவா—பெறுபே
றெழுபிறப்புந் தியவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். 7

அன்புடைமை

வேந்துரையாற் பூசைபுரி வேடன்மனை வெந்துமுன்போற்
சேர்ந்துபணி செய்தாள் சிவசிவா—ஓர்ந்தவிடத்
தன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு. 8

விருந்தோம்பல்

அன்னமிடான் பொன்னு டடைந்துந் தனதுடலைத்
தின்னெனவே தின்றான் சிவசிவா—மன்னியயற்
செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. 9

இனியவை கூறல்

குன்றெடுத்தா னின்சொற் கொடுகருணை வாரிதியைச்
சென்றெடுத்தின் புற்றான் சிவசிவா—நன்றெடுத்த
இன்சொ லினிதின்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. 10

செய்ந்நன்றியறிதல்

பூடணம்போல் வீடணன்மேற் போனவே லேற்றநன்றி
தேடமுடி யாதே சிவசிவா—நாடினெதிர்
செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது. 11

நடுவுநிலைமை

நங்கையுமை சொல்லால் நடுவிகந்த மால்வெருவு
செங்கணர வானுன் சிவசிவா—எங்குஞ்
சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி. 12

அடக்கமுடைமை

இறைமுருகன் முன்னின் றிசைத்தமொழி தேரான்
சிறையிருந்தான் முன்சி வசிவா—புறவுறுப்பின்
யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 13

ஒழுக்கமுடைமை

தன்மதுரை சொன்னபழிக் கஞ்சித் தகவுரைத்தான்
தென்மதுரை நாதன் சிவசிவா—என்னின்
ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். 14

பிறனில்விழையாமை

வரமிழந்தான் சீதையினால் வாழ்விழந்தான் பத்துச்
சிரமுமிழந் தான்சி வசிவா—உரமாம்
எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல். 15

பொறையுடைமை

ஐவரினு முன்னோன் அரசவையி லேபொறுத்த
செய்கைபெரி தன்றோ சிவசிவா—வையத்
தொறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. 16

அழுக்காறாமை

மேருவுட னிகலி விந்தமலை வீறழிந்து
சேருநில னாடே சிவசிவா—ஓரின்
அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும். 17

வெஃகாமை

வாசவனோ ராசைகொள வந்த பலனையிந்தத்
தேசமறி யாதோ சிவசிவா—பேசுங்காற்
சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர். 18

புறங்கூறாமை

குந்திமகார் பேறுரைத்த கொற்றவனுந் தன்வரவுஞ்
சிந்தைசெயா தூற்றான் சிவசிவா—நிந்தை
பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறன்தெரிந்து கூறப் படும். 19

பயனில சொல்லாமை

மன்னவையிற் சொன்ன வசையாற் சிசுபாலன்
சின்னமுற்றான் அன்றோ சிவசிவா—என்னிற்
பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல். 20

தீவினையச்சம்

பார முடிபத்தும் பறித்தபழி சேதுவினிச்
திருதவி னாலே சிவசிவா— சாருமிகல்
தியவை திய பயத்தலால் தியவை
தியி னு மஞ்சப் படும். 21

ஒப்புரவறிதல்

தாயைத் தடிகவென்ற தந்தை மொழிதவருல்
சேயைப்போ லுண்டோ சிவசிவா— ஆயுமிடத்
தொத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். 22

ஈகை

தந்தைக் கிளமை தருபூ ருவைவாங்கர்வார்
சிந்திக்கி னெங்கே சிவசிவா— நிந்தித்
திலனென்னும் எவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள. 23

புகழ்

ஓடிவரு புட்கன் றுடலையரிந் திந்தபுகழ்
தேட அரிதே சிவசிவா— நாடினதும்
ஈத லிசைபட வாழ்தல் அதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு. 24

அருளுடைமை

அன்றுமகப் பெறுவாட் கன்னைவடி வாகியரன்
சென்றுதுணை செய்தான் சிவசிவா—என்றும்
அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள. 25

புலான்மறுத்தல்

புன்புலா லுண்ணுத புள்ளடைந்த நன்கறிவார்
தின்பரோ தின்னுர் சிவசிவா—துன்புறாஉந்
தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள். 26

தவம்

ஆடும் பரிசேவ லானுன் அடற்சூரன்
தேடுந் தவத்தாற் சிவசிவா—நாடுங்கால்
வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும். 27

கூடாவொழுக்கம்

அட்டுநர னூனிட் டரக்கன் பழிக்கரசைத்
தெட்டிவழி கொண்டான் சிவசிவா—கிட்டினர்க்குப்
பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மெற்றெற்றென்
றேதம் பலவுந் தரும். 28

கள்ளாமை

இல்வலன்வா தாவிகப டேதா யதுமலயச்
செல்வமுனி நோக்காற் சிவசிவா—சொல்லிற்
களவினா லாகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும். 29

வாய்மை

பொங்குபுகழ் வாய்மைப் புனிதவதி யார்க்கரனார்
செங்கனியை யீந்தார் சிவசிவா—அங்கம்
மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை. 30

வெகுளாமை

தாவு சினத்தாற் றலையிழந்தான் றக்கன்உமா
தேவிமக ளாயுஞ் சிவசிவா—ஆவன்மிகுந்
தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம். 31

இன்னா செய்யாமை

புறம்பயத்து மின்னையுயிர் போக்கவந்தான் பட்ட
திறந்தெரியா தோசிவசிவா—பிறழ்ந்து
பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும். 32

கொல்லாமை

மேவும் வனசரனோர் வேதியனைக் காத்தநலந்
தேவனறி வானே சிவசிவா—பூவுலகில்
தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. 33

நிலையாமை

எங்கு மிறவா னிறந்ததொரு தூணினர
சிங்கத்தா லன்றோ சிவசிவா—தங்கிநிலை
நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை. 34

துறவு

பத்ரகிரி மாதர்வசப் பட்டமன மீட்டதொரு
சித்ரகதை யன்றோ சிவசிவா—ஒத்துத்
தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். 35

மெய்யுணர்தல்

சொற்சுவைசேர் வாசகத்திற் சொன்னபொரு ளீதென்றே
சிற்சபையே போனார் சிவசிவா—நற்கலைநூற்
கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. 36

அவாவறுத்தல்

சாரங்க மீது சடபரதன் சிந்தைவைத்துச்
சீரங்கம் பெற்றான் சிவசிவா—நேரும்
அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து. 37

ஊழ்

உற்றாளைப் பெட்டகத்திட் டோட்டுமிலங் கேசனைப் பின்
செற்றாள்வந் தென்பார் சிவசிவா—உற்றோரின்
ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும். 38

இறைமாட்சி

பெற்றவைக்கென் போலிரண்டு பேரிலொரு வன்பிழைத்தாற்
சிற்றவைக்கா மென்றான் சிவசிவா—உற்ற
முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும். 39

கல்வி

பார்க்கவன்பாற் கல்வி பயின்றகயன் பார்க்கவனேய்
தீர்க்கவரம் பெற்றான் சிவசிவா— வேற்கணன்றாக்
கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. 40

கல்லாமை

புத்தர்மிக வாது புகன்றதுபோய் வாதவூர்ச்
சித்தர்முனே தானர் சிவசிவா—ஒத்தநெறி
கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின். 41

கேள்வி

வெய்யமரப் பேருரைத்த வேடனும்வான் மீகியெனுந்
தெய்வமுனி யானன் சிவசிவா—துய்ய
செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து. 42

அறிவுடைமை

சனக னுலகநெறி தாவாத ஞான
தினகரனு னன்சி வசிவா—மன தினுடன்
எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு. 43

குற்றங் கடிதல்

தன்மகனன் கன்றினுக்குந் தான்மந் திரிக்குமென்றான்
சென்மமன்றே சென்மஞ் சிவசிவா—உன்னுங்கால்
தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்
என்குற்ற மாகு மிறைக்கு. 44

பெரியாரைத் துணைக்கோடல்

வன்றொண்டர் சேரரையும் வாவென் றரனழைப்பச்
சென்றுதெரி வித்தார் சிவசிவா—என்றுமென்றுந்
தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை. 45

சிற்றினஞ் சேராமை

அறியவச மோகலைக்கோட் டந்தணனு மாதர்
செறியவசத் தன்சி வசிவா—பிறிதென்
மனநல மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழுந் தரும். 46

தெரிந்து செயல்வகை

பன்மறையோர்க் கானளித்த பாரரசன் கோம்பியெனுஞ்
சென்ம மெடுத்தான் சிவசிவா—உன்னின்மிகு
நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை. 47

வலியறிதல்

நீச வுருவம் நிலனுள் திரிசங்கு
தேசிகனாற் பெற்றான் சிவசிவா—பேசின்
வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல். 48

காலமறிதல்

யோகிருந்த கால முணரா துறுமதனன்
தேக மிழந்தான் சிவசிவா—ஆகில்
அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின். 49

இடனறிதல்

வயத்திரத மேறி வருமபிமன் றன்னைச்
செயத்திரன்கொன் றான்சி வசிவா—முயற்சியுடன்
எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின். 50

தெரிந்துதெளிதல்

அத்தன் பதத்தியற்று மாழி சலந்தரனைச்
சித்ரவதை செய்த சிவசிவா—தத்தம்
பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல். 51

தெரிந்து வினையாடல்

சதமுகனை ராகவனுஞ் சானகியைக் கொண்டே
சிதையவதைத் தான்சி வசிவா—இதயத்
திதனை யிதனு லிவன்முடிக்கு மென்ருய்ந்
தனை யவன்கண் விடல். 52

சுற்றந்தழால்

அன்றுதம ருள்ள மறிந்தடைந்த வீடணற்குச்
சென்றுறுதி சொன்னன் சிவசிவா—ஒன்றும்
உமைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந் தெண்ணிக் கொளல். 5௩

பொச்சாவாமை

இப்புவிமேற் கோயி லிறந்ததய னுர்மறந்து
செப்புதலா லன்றோ சிவசிவா—எப்பொழுதும்
பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு. 54

செங்கோன்மை

மங்காத மங்குறனை மாறன்விலங் கிட்டதவன்
செங்கோன் மகிமை சிவசிவா—எங்கேனும்
வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின். 55

கொடுங்கோன்மை

தாதை சிறையிருக்கத் தங்கையழக் கஞ்சனுறுந்
திதையெவர் சொல்வார் சிவசிவா—மேதினியில்
அல்லற்பட் டாற்ரு தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. 56

வெருவந்த செய்யாமை

வண்ண மகள்நோவ வருகேச கன்மடிந்தான்
திண்ணமிது வன்றோ சிவசிவா—எண்ணின்
வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்த மொல்லைக் கெடும். 57

கண்ணோட்டம்

முப்புரத்தை நீறாக்கி மூவரையுங் காத்தநலஞ்
செப்பமுடி யாதே சிவசிவா—ஒப்பிற்
கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு. 58

ஒற்றாடல்

வந்தசுக சாரன் வடிவை நிருதனன்றிச்
சிந்தைசெய்தார் காண்பார் சிவசிவா— பந்தந்
துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்வில தொற்று. 59

ஊக்கமுடைமை

நல்லதின மென்றே நரகனிறு நாளுலகிற்
செல்லவரம் பெற்றான் சிவசிவா—வல்லமைசேர்
உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு. 60

மடியின்மை

தந்தையுள நோக்கித் தவமே வியதுருவன்
சிந்தைவலி தன்றோ சிவசிவா—நந்து
மடியிலா மன்னவ னெய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லா மொருங்கு. 61

ஆள்வினையுடைமை

எய்தா திராமற் கிலக்குவன்போ லென்றுரைக்கச்
செய்தா னடிமை சிவசிவா—நொய்தேனும்
இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண். 62

இடுக்கணழியாமை

இரணியன்ருன் செய்த இடும்பைதனை மைந்தன்
திரணமாக் கண்டான் சிவசிவா—மரணம்
அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்க ணிடுக்கட் படும். 63

அமைச்சு

போயவர சாளி புகவெழக்கண் டாளியுடல்
தீயினமைச் சிட்டான் சிவசிவா—வாயிற்
றெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு. 64

சொல்வன்மை

என்றும் பதினு றெனஅரனு ரோதியசொல்
சென்றதே யின்றுஞ் சிவசிவா—நன்றிபெறச்
சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து. 65

வினைத்தூய்மை

மைந்தன்முடி மண்ணிலிட்டான் மாள்கவெனக் கைவிரித்த
சிந்துபதி பட்டான் சிவசிவா—தந்தஞ்
சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று. 66

வினைத்திட்பம்

எய்து முருவறிந்து மேந்திழையாள் பாவனைதான்
செய்தபடி யாச்சே சிவசிவா—வையத்தின்
எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். 67

வினைசெயல்வகை

மங்கைமுலைக் கச்சவிழ்த்த மாயச் சயந்தனெரு
செங்க ணிழந்தான் சிவசிவா—எங்கும்
முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். 68

தூது

சானகியைக் கண்டரக்கன் முனிகலி வாலிலிடுந்
தீநகரி லிட்டான் சிவசிவா—ஊனுக்
கிறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது. 69

மன்னரைச்சேர்ந்தொழுகல்

அன்றரசோ டேரண்ட ஞடுமுரை யாலவமே
சென்றுயிரை யீந்தான் சிவசிவா—நன்றிபெற
வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றுங்
கேட்பினுஞ் சொல்லா விடல். 70

குறிப்பறிதல்

வென்றி யிராமனெடு வில்லைமுனி வன்குறிப்பாற்
சென்று வளைத்தான் சிவசிவா—மன்றிற்
குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல். 71

அவையறிதல்

மன்றிற் பரசமய கோளரிமுன் வல்லமணர்
சென்றநிலை யென்னுஞ் சிவசிவா—துன்றுதுற
வாற்றி னிலைதளர்ந் தற்றே வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்ன ரிழுக்கு. 72

அவையஞ்சாமை

முத்தமிழ்ச்சங் கத்தவரை மூதுரையால் வள்ளுவருஞ்
சித்தமகிழ் வித்தார் சிவசிவா—எத்தனையுங்
கற்றுருட் கற்று ரெனப்படுவர் கற்றார்முற்
கற்ற செலச்சொல்லு வார். 73

நாடு

பொன்னியென வேழமுனி பொற்கரக நீர்கவிழ்த்த
சென்னிவள நாடே சிவசிவா—நன்று
டிருபுன லும் வாய்ந்த மலையும் வருபுன லும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு. 74

அரண்

காத்தா னசலக் கருணு கரன்கலிங்கஞ்
சேர்த்தான் றிறத்திற் சிவசிவா—பார்த்தால்
எனமாட்சித் தாயினு மென்னும் வினமாட்சி
யில்லார்க ணில்லா தரண். 75

பொருள்செயல்வகை

கொண்டான் வடகிரியிற் கூட லரசுபொருட்
சென்டா லடித்தே சிவசிவா—கண்டாயில்
ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்
ஏனை யிரண்டு மொருங்கு. 76

படைமாட்சி

பார்த்திவனைக் கட்டவிழ்த்துப் பத்ராய வன்பகையைத்
தீர்த்தொருவ னின்ருன் சிவசிவா—ஆர்த்தங்
கொலித்தக்கா லென்னு முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும். 77

படைச்செருக்கு

உரமிறந்து போகாத வுள்ளத் தரவான்
சிரமறுந்துற் ருன்சி வசிவா—தரமாய்
விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னுளை யெடுத்து. 78

நட்பு

உற்ற குசேலனல முற்றிருத்தற் காவுவந்தோர்
சிற்றுணவுட் கொண்டான் சிவசிவா—சுற்றும்
உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதா நட்பு. 79

நட்பாராய்தல்

துருவதன்நட் பாயான் துரோணனடி யாராற்
செருவினின்மு னஞ்சி வசிவா—வருவதன்முன்
ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந்துயரந் தரும். 80

பழைமை

குறித்தரசு கன்னனுடன் கோதை விளையாடடுள்
தெரித்தமணி யுஞ்சி வசிவா—பொறுக்கின்
அழிவந்த செய்யினு மன்பரு ரன்பின்
வழிவந்த கேண்மை யவர். 81

தீநட்பு

பொன்மானென் ருசைகொண்ட பொன்னனையாள் பட்டதுயர்
சென்மாந்த்ர பாவஞ் சிவசிவா—சொன்னேங்
கனவினு மின்னது மன்னே வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. 82

கூடாநட்பு

தாய்போல் வருமலகை தன்னட் பறிந்துமவள்
சேய்போ லிருந்தான் சிவசிவா—மாயனெதிர்
நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொல்
ஒல்லை யுணரப் படும். 83

பேதைமை

தன்றலைமேற் றன்கைவைத்தோர் தானவன்முன் பெற்றவரஞ்
சென்றிறக்க லாச்சே சிவசிவா—என்றென்றும்
பொய்படு மொன்ரு புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின். 84

புல்லறிவாண்மை

மாற்கு மதுவுங் கைடவனும் வாழ்நாளைத்
தீர்க்க வரமீந்தார் சிவசிவா—பார்க்கின்
அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாதும்
இல்லை பெறுவான் றவம். 85

இகல்

தாயடிமை வானமுதந் தந்தகற்றச் சார்வயின
தேயணைமால் வென்ருன் சிவசிவா—வேய
இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர். 86

பகைமாட்சி

ஐங்கரனென் ரேரா அரக்கன் றலேமோதிச்
செங்கரங்கள் நொந்தான் சிவசிவா—துங்க
வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்ருர்க் கினிது. 87

பகைத்திறந்தெரிதல்

ஐங்கரனைக் கண்டுநகைத் தாவணிநா லாந்திதியில்
திங்கள்பகை யானுன் சிவசிவா—எங்கும்
பகையென்னும் பண்பி லதனை யொருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று. 88

உட்பகை

வென்றிபுனை சம்பரனை வென்றதவ னில்லிருந்து
தென்றலெனுந் தேரான் சிவசிவா—என்றும்
அரம்பொருத பொன்போலத் தேயு முரம்பொரு
துட்பகை யுற்ற குடி. 89

பெரியாரைப் பிழையாமை

வந்த முனிவோரை வணங்கா வரமுனியைச்
சிந்தைசெயல் வேண்டுஞ் சிவசிவா—முந்தும்
பெரியாரைப் பேணு தொழுகிற் பெரியாராற்
பேரா விடும்பை தரும். 90

பெண்வழிச் சேறல்

ஓது கனிபொருந்தும் உங்கள் மனத்தினுற்ற
சேதிசொலி னென்ருன் சிவசிவா—ஆதலினுல்
இல்லாள்கட் டாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும். 91

வரைவின்மகளிர்

போச னுரைக்கிசைந்த புண்ணியனைவேசைகொன்ருள்
தேசமறி யாதோ சிவசிவா—பேசுமிடத்
தன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியார்
இன்சொ லிழுக்குத் தரும். 92

கள்ளுண்ணுமை

சுக்கிரனுர் சாபத் தொடர்பறிந்தோர் கள்ளிருந்த
திக்கினடப் பாரோ சிவசிவா—மக்களென்பார்
கள்ளுண்ணுப் போழ்திற் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொ லுண்டதன் சோர்வு. 93

சூது

வெற்றிநளன் சூதாடி வீடுவிட்டுக் காடுறைந்தான்
சிற்றிடையுந் தானுஞ் சிவசிவா—சுற்றும்
உடைசெல்வ மூணொளி கல்வியென் றைந்தும்
அடையாவாம் ஆயங் கொளின். 94

மருந்து

மாதவரூண் மாமருதின் மங்கையர்க்கு முற்பிறப்பின்
சேதிதெரி விக்குஞ் சிவசிவா—ஆதலினுன்
மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை யுயிர்க்கு. 95

குடிமை

தந்தை வதுவை தவிராது வீடுமன்போய்ச்
சிந்தைதெளி வித்தான் சிவசிவா—நந்தா
நலம்வேண்டின் நாணுடைமை வேண்டுங் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு. 96

மானம்

அன்றெருவை வேந்த னரிவைதனக் காவமர்க்குச்
சென்றுயிரை யீந்தான் சிவசிவா—துன்று
மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னுர்
உயிர்நீப்பர் மானம் வரின். 97

பெருமை

நல்லூழி நான்குமனு நாரியுட னண்ணவரி
செல்வமக வானுன் சிவசிவா—ஒல்லும்
பெருமை யுடையவ ராற்றுவா ராற்றின்
அருமை யுடைய செயல். 98

சான்றாண்மை

தாரு வனமுனிவர் தம்பிழைநோக் காதருளே
சேரநடஞ் செய்தான் சிவசிவா—ஒருமவர்
இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. 99

பண்புடைமை

பாந்தட் பகைமுயலைப் பற்றுதலா லென்றுமதி
தேர்ந்து மதைநீக்கான் சிவசிவா—கூர்ந்த
அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். 100

நன்றியில் செல்வம்

நல்விசயன் கண்ணன்வர நன்மைபுரி யாமறையோன்
செல்வமிருந் தென்னாஞ் சிவசிவா—தொல்லுலகில்
நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று, 101

நாணுடைமை

சாரும் பதியிலராய்த் தாருவன மாதர்தமைச்
சேரஇறை சென்றான் சிவசிவா—பாரின்மிசை
நாணகத் தில்லா ரியக்கம் மரப்பாவை
நாணா லுயிர்மருட்டி யற்று. 102

குடிசெயல்வகை

துய்ய பகிரதனுந் தொல்லரச ரல்லலறச்
செய்தவமென் சொல்வாஞ் சிவசிவா—வையமதில்
நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல். 103

உழவு

வள்ளிபுனங் காத்திருந்த வாறேது வான்பயிர்செய்
தெள்ளிமையா லன்றோ சிவசிவா—உள்ளுமிடத்
தேரினு நன்றா லெருவிடுதல் கட்டபின்
நீரினு நன்றதன் காப்பு. 104

நல்குரவு

மாமணியாற் கோசிகன்போய் மன்விடந்தீ ரான்வறுமைத்
தீமையினுன் மீண்டான் சிவசிவா—ஆமுன்
அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும். 105

இரவு

தருமகுண மாவலிபாற் ருனமெனச் சேர்ந்தான்
திருமகி ணன்ருன் சிவசிவா—பரிவின்
இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்ருதார் மாட்டு. 106

இரவச்சம்

ஒன்றுதவ வேட முடன்சரா சந்தன்முனஞ்
சென்றிரந்தார் மன்னர் சிவசிவா—என்றுங்
கரவா துவந்தீயுங் கண்ணன்னுர் கண்ணும்
இரவாமை கோடி யுறும்: 107

கயமை

வாரிவழி தாரா வருண னடைக்கலமாய்ச்
சேரவழி செய்தான் சிவசிவா—ஆருமிதஞ்
சொல்லப் பயன்படுவர் சான்ருேர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ். 108

தகையணங்குறுத்தல்

ஆர்ந்தசுர ராளு ரமுதணங்கைக் கண்டுமகிழ்
சேர்ந்தசுர ராஞர் சிவசிவா—சார்ந்துதனே
உண்டார்க ணல்ல தடுநருக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த லின்று. 109

குறிப்பறிதல்

பைங்தொடியுஞ் சுந்தரரும் பார்த்தகுறிப் பாலன்ருே
சிந்தையுமொன் ருஞர் சிவசிவா—தந்தமது
கண்ணெடு கண்ணிணே நோக்கொக்கின் வாய்ச்சொற்க
ளென்ன பயனு மில. 110

புணர்ச்சி மகிழ்தல்

பார்த்தன் சுபத்திரைதன் பார்வையினுன் மெய்வெதுப்புந்
தீத்தணைக் கொண்டான் சிவசிவா—மாத்திரைநாம்
நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்ரு ளிவள். 111

நலம்புனைந்துரைத்தல்

நந்து சசிமுகத்தை நாள்மதியென் றேநகுடன்
சிந்தைமகிழ் கொண்டான் சிவசிவா—முந்தும்
அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து. 112

காதற்சிறப்புரைத்தல்

காதற் குணம்விருத்த காசிவிப சித்துரைத்த
சேதித் திறமே சிவசிவா—நீதிச்சொல்
உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணுள் குணம். 113

நாணுத்துறவுரைத்தல்

சேர விரைந்துவந்துஞ் சீதை யிராமனுளந்
தேர விருந்தாள் சிவசிவா—பாரிற்
கடலன்ன காம முழந்தும் மடலேருப்
பெண்ணிற் பெருந்தக்க தில். 114

அலரறிவுறுத்தல்

இந்துநுதன் மாயைவிர செண்ணி விலாசிசொலச்
சிந்தைமகிழ் கொண்டாள் சிவசிவா—புந்தி
களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்ருற் காமம்
வெளிப்படுந் தோறு மினிது. 115

பிரிவாற்ருமை

கோதைவரி விற்றடக்கைக் கொண்டல்பிரி வாற்ருமற்
சீதைவனம் போனுள் சிவசிவா—ஓதுமிடத்
தின்ன தினனில்லூர் வாழ்த லதனினும்
இன்ன தினியார்ப் பிரிவு. 116

படர்மெலிந்திரங்கல்

மாறனொரு நாட்பிரிவின் மங்கையர்க ணீடிரவைச்
சிறியுரை செய்தார் சிவசிவா—கூறிக்
கொடியார் கொடுமையிற் ருங்கொடிய இந்நாள்
நெடிய கழியு மிரா. 117

கண்விதுப்பழிதல்

நாடரிய கண்ணே நளனை விழித்தகற்றித்
தேடியழ லென்னே சிவசிவா—ஓடிக்
கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து. 118

பசப்புறுபருவரல்

மாரன்மகன் மஞ்சமுடன் வாராமுன் வாணன்மகள்
சேருநினை வாலே சிவசிவா—சார்வாற்
பசந்தா ளிவளென்ப தல்லா லிவளைத்
துறந்தா ரவரென்பா ரில். 119

தனிப்படர்மிகுதி

முல்லைமட வார்கண்ணு முன்னின் ருருமொழியாற்
செல்லறவி ரென்ருர் சிவசிவா—சொல்லின்
நசைஇயார் நல்கா ரெனினு மவர்மாட்
டிசையு மினிய செவிக்கு. 120

நினைந்தவர் புலம்பல்

சந்தனுவுங் கங்கை தனைப்படத்தி லேயெழுதிச்
சிந்தையல மந்தான் சிவசிவா—தந்தமனத்
துள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காம மினிது. 121

கனவுநிலை யுரைத்தல்

நித்திரையி லுற்றணைந்தான் நேய னிரத்நவல்லி
சித்திரரே கைக்குச் சிவசிவா—ஒத்துரைக்கத்
துஞ்சுங்காற் ருேண்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து. 122

பொழுதுகண் டிரங்கல்

வாடிக் கணவனுரு வல்லிரவிற் பிங்கலையுந்
தேடிமன நொந்தாள் சிவசிவா—ஓடிப்
பொருள்மாலை யாளரை யுள்ளி மருள்மாலை
மாயுமென் மாயா உயிர். 123

உறுப்புநலனழிதல்

வைதாள் விசயன் மருவா துருப்பசியென்
செய்வா ளயர்ந்தாள் சிவசிவா—மெய்யாக்
கொடியார் கொடுமை யுரைக்குந் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள். 124

நெஞ்சொடு கிளத்தல்

வண்ண உருக்குமணி மாயன் மணம்புணர்தல்
திண்ணமென வுற்றாள் சிவசிவா—உள்நினைவிற்
செற்றா ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயாம்
உற்றா லுறாஅ தவர். 125

நிறையழிதல்

அன்றுவனத் தண்ண லருகே நிறையழிந்தார்
சென்றுமுனி மாதர் சிவசிவா—ஒன்ற
நிணந்தியி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பே மெனல். 126

அவர்வயின் விதும்பல்

மீன்னுமுன்கே ளென்னவுஞ்சி மந்தனிதே றாமலுளஞ்
சின்னமுற லென்றே சிவசிவா—உன்னில்
ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு. 127

குறிப்பறிவுறுத்தல்

குன்றிற் சுமதி குறிப்பாற் றருமகுத்தன்
சென்றுமயல் கொண்டான் சிவசிவா—என்றும்
முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு. 128

புணர்ச்சி விதும்பல்

மன்ன னகலியைநீள் வஞ்சனைநீங் காமலுடற்
சின்னமுற லென்னே சிவசிவா—என்னவவற்
காணுங்காற் காணேன் தவருய காணுக்காற்
காணேன் தவறல் லவை. 129

நெஞ்சொடு புலத்தல்

கன்ருல் விளவெறிந்த கண்ண னுட னெம்மைவிட்டுச்
சென்ருயே நெஞ்சே சிவசிவா—ஒன்ருவித்
துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி. 130

புலவி

சத்திய பாமைமலர் தந்திலனென் றூடவுடன்
சித்தமகிழ் வித்தான் சிவசிவா—நித்தமுணற்
குப்பமைந் தற்ருற் புலவி யதுசிறிது
மிக்கற்ரு னீள விடல். 131

புலவி நுணுக்கம்

இப்பிறப்பி லேபிரியே னென்றநள ஞேடேல்
செப்பவரி தன்றே சிவசிவா—அப்படியே
இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனுக்
கண்ணிறை நீர்கொண்ட னள். 132

ஊடலுவகை

மான்மகள்பா லூடிமர மானன் மழகளிற்றின்
தேனனையாள் காந்தன் சிவசிவா—ஏனெனிலங்
கூடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின். 133

சிவசிவ வெண்பா

முற்றிற்று

———

பொழிப்புரை

காப்பு

வழுத்துற - புகழ்ந்து சொல்ல. எற்கு - எனக்கு. ஈரா ருன கை - ஈரமாகிய மதவாறு உண்டாகியகை.

அவையடக்கம்

கவிஞர் - பாடும் புலவர். பழமொழி - தொன்று தொட்டு வழங்கிவரும் முதுமொழி.

உதாரணங்கள்

ஆரணம் - வேதம். திருக்குறள் செந்தமிழ்ப் பொது மறை. பாரதம் ஐந்தாம் வேதம் என்று சொல்லப்படும். அதனைப் பிள்ளையார் மேருமலையில் எழுதியருளினர் என்ப.

நூல்

1 வில் - அருச்சுனனுடையது. பிரம்பு - பாண்டிய னுடையது. இவ்விரண்டானும் அடிபட்டவர் சிவபெரு மான். சிற்பரன் - வாலறிவன். வடு - தழும்பு.

2 கெடுப்பது - மக்களின் தீமையால் மழை பெய்யாமல் கெடுக்கும். நன்மையால் பெய்து வாழ்விக்கும்.

3 வேதமுனி - வியாசர். உடையின்றி நீராடிய வானகப் பெண்கள் வியாசரைக் கண்டு நாணினர். அவர் மகன் சுகருக்கு நாணவில்லை.

7 மறலி - கூற்றுவன்; யமன். மார்க்கண்ட முனிவர் பொருட்டு யமன் உதைபட்டது.

8 பிரமோத்தரகாண்டம்: வேடன் மனைவி சிவ வேள்வியில் வீழ்ந்து உயிர் நீத்தாள் - அருளால் உய்த் தெழுந்து பணி புரிந்தாள்.

9 தண்டகாரண மகிமையில் சுகேது மன்னன் இட் டுண்டு வாழாமையில், நரகத்தில் தன்னுடலைத் தின்றான்.

10 குன்று - மலை; திருக்கயிலாயமலை; எடுத்தான் - இலங்கை வேந்தன்; இராவணன். வாரிதி - கடல்.

11 இராவணன், விபீடணன் மேல் விடுத்த வேலை இலக்குமணன் தன் மார்பிலேற்ருன்.

12 பார்வதி பரமேசுரன் ஆடிய சூதாட்டத்தில் மால் நடுவு நிலைமை தவறினன். பார்வதி திருமாலைப் பாம்பாகுக என வெய்துரைத்தாள்.

13 சிறையிருந்தான் - நான்முகன். திருமுருகன் அயனைக் குட்டிச் சிறையிட்டது.

14 திருவிளையாடல் பழிக்கஞ்சின படலம்.

15 சிரம் - தலை. இழந்தவன் - இராவணன்.

16 ஐவர் - பாண்டு மைந்தர் ஐவர். முன்னேன் - தருமன்.

17 மேரு - பெரிய பொன்மலை. விந்தம் - விந்தமலை; வீறு - பெருமை.

18 வாசவன் - இந்திரன். ஆசை - அகலிகை மேற் கொண்ட காதல்.

19 கொற்றவன் - துரியோதனன். தன் வரவு - துரியோதனனுடைய பிறப்பியல்பு.

20 மன்னவை - அரசவை. வசை - பழிமொழி. சிசுபாலன் - கண்ணனல் கொல்லப்பட்ட ஓர் அரசன்.

21 இராமன் இராவணனைக் கொன்ற பழி இராமேசுரத்தில் அவன் சிவனை வழிபட நீங்கிற்று.

22 தடிதல் - கொல்லுதல். சேய் - பிள்ளை. சமதக்கினி மகன் பரசுராமன். தந்தை சொற்படி தாய் இரேணுகையைக் கொல்லல்.

23 பூரு - பூருவாகன். நிகர் - ஒப்பு. யயாதி மன்னன் மகன் பூருவாகன் தன் இளமையைத் தந்தைக்குக் கொடுத்து அவன் முதுமையைத் தான் பெறுதல்.

24 புள் - பறவை; புரு. சிபிவேந்தன் புருவின் பொருட்டுத் தன்னுடலைக் கொடுத்தல்.

25 திருச்சிராப்பள்ளி இறைவன் பத்திமிகு இரத்தினவதியின் பேறு காலத்துத் தாயாக வந்தருளியது.

26 திருவிளையாடலில் நாரை மீன் முதலிய புலாலுண்ணுமையால் அது வீடுபேறு எய்தியமை காண்க.

27 சூரன் செய் தவப்பேற்ருல் சேவலாய முருகப் பெருமான் கொடியாய் விளங்கியது.

28 அட்டு - சமைத்து. நரர் ஊன் - மக்களிறைச்சி. வேந்தனொருவன் தென்புலத்தார் பூசையில் வசிட்டனுக்கு ஊன்கலந்த அமுது படைத்தனன். அரக்கன் வஞ்சனையில் நரரூனையும் சேர்த்துவிட்டான். நரரூன் என்று கண்ட வசிட்டன், வேந்தனை அரக்கனுக என்று சபித்தான்.

29 வாதாவி தன் தம்பியைக்கொன்று அகத்தியர்க்குப் படைத்து அவரால் தானும் மாண்டான்.

30 புனிதவதியார் - காரைக்காலம்மையார். செங்கனி - மாங்கனி.

31 தக்கன் சிவபெருமானை மதியாது செய்த தீ வேள்வியால் ஆட்டுத்தலை பெற்ருன். தாவு - செருக்கு.

32 புறம்பயத்துப் பெண்ணைக் கொல்லத் துணிந்த கொடியோன் கூர்மையான ஊது கொம்பை எறிந்தான். அஃது அவன் மேலேயே பட்டு அவனையே கொன்றது.

82 வனசரன் - காட்டில் திரியும் கள்வன். வேதியன்- மறையவன். வேதியனிடத்து மாணிக்கம் இருந்தது. கள்வன் பறிக்கத் துணிந்தான். வேதியன் மணியை விழுங்கினன். இருவரும் மாணிக்கம் மற்றவர் வயிற்றிலிருக்கிறதென்று சண்டையிட்டனர். வேடன் ஒருவன் வந்தான். கள்வன் வேதியனைக் காக்கத் தன் வயிற்றைக் கீறிக்காட்டி மாண்டனன்.

34 இறவான் - இரணியன். நரசிங்கன் - திருமால். நரசிங்கம் தூணில் தோன்றியது.

35 பத்திரகிரியார் தம் மனையாளின் பொருந்தாச் செயல்கண்டு துறந்தனர்.

36 வாசகம் - திருவாசகம். மாணிக்கவாசகர், திருவாசகம், திருக்கோவையாரின் பொருள் அம்பலவாணரே எனக்காட்டித் திருவடியடைந்தனர்.

37 சாரங்கம் - மான். சடபரதர் – ஒரு முனிவர். வளர்த்த மான்மேல் ஆசையால் மீண்டும் மானுகப் பிறந்தனர்.

38 இராமாயணத்தில் வேதவதி கதை. இராவணன் வேதவதியைத் தீண்டச் சென்றனன். அவள் தீப்பாய்ந்தாள். பின் தாமரையில் தோன்றினாள். இராவணன் அப்பிள்ளையைப் பெட்டியில் வைத்து நடுக்கடலிலிட்டனன். அவளே சனகன் வளர்த்த சீதை.

39 நால்வரும் நச்சுப் பொய்கையில் இறந்த காலத்துத் தருமன் தன்னுடைய சிற்றன்னையின் பொருட்டுச் சகாதேவனை எழுப்ப வேண்டல். அவை (அவ்வை) - தாய்.

40 பார்க்கவன் - வெள்ளி. கசன் - வியாழன் மகன். வெள்ளியினிடத்துக் கசன் உயிரைப் பிழைப்பிக்கும் மந்திரம் பெறத் தொண்டு செய்தான். பகைவர்கள் கசனைக்கொன்று கள்ளுடன் கரைத்து வெள்ளிக்கு ஊட்டினர். இதனையுணர்ந்த வெள்ளி கசனை வயிற்றுளிருந்தபடியே சாவை வெல்லும் மந்திரத்தை உபதேசித்தான். கசன் வெள்ளி வயிற்றைக் கிறிக்கொண்டு வெளிவந்தான். இறந்த வெள்ளியை எழுப்பினான்.

41 புத்தர் - யாழ்ப்பாணத்திலிருந்து வாதுக்கு வந்த புத்த குருமார். மணிவாசகர் முன் தோற்றார் தில்லையில். திருவாசகத்துத் திருச்சாழல் காண்க.

42 வெய்யமரம் - மராமரம். காட்டு வேடனுக்கு வான்மீக முனிவர் மராமரமென உபதேசித்தார். அவன் அதனைச் செபித்தான். அஃது இராம ராம என நின்று வீடெய்தத் துணையாயிற்று.

43 சனகவேந்தன் பெருஞானியாக இருந்தே உலகாண்டான்.

44 மனுநீதிகண்ட சோழன் இறந்த ஆன்கன்றின் பொருட்டுத் தன்மகனைத் தேர்ச் சக்கரத்திட்டான்.

45 வன்றொண்டர் திருக்கயிலைக்குச் செல்லும்போது உடன்வந்த சேரரைச் சிவபெருமானிடம் விண்ணப்பித்துத் திருமுன் வரச் செய்தனர்.

46 இராமாயணத்தில் கலைக்கோட்டு முனிவர் மாதர் வயப்பட்டு அயோத்திக்கு வருதல்.

47 ஓர் அரசன் பல மறையவர்க்கு நாளும் ஆயிரம் பசுத்தானம் பண்ணினான், அம் மறையவர் சாபத்தால் அவ்வரசன் பச்சோந்தியாகப் பிறந்தான்.

48 சத்தியவிரதனென்னும் திரிசங்கு வசிட்டன் சாபத்தால் நீசன் ஆனுன். கௌசிகன் துணையால் வான் போகலுற்ருன். தேவர்களால் அந்தரத்தில் தடைபட்டு நின்ருன்.

49 சிவபெருமான் யோகத்திலமர்ந்த காலத்து மன்மதன் சென்று அவன்றன் நெற்றிவிழியால் நீறுபட்டழிந்தான்.

50 அருச்சுனன் மகன் அபிமன்னுவைச் சயத்திரதன் கொன்றமை பாரதத்திற் காண்க.

51 அத்தன் - சிவபெருமான். ஆழி - சக்கரம். சிவபெருமான் காலாற் கீறிய சக்கரம் சலந்தரனைக் கொன்றது.

52 சதமுகன் - சதகண்டன். ராகவன் - இராமன். சானகி - சீதை.

53 தமர் - சுற்றத்தார். தமருள்ளம் - இராவணன் முதலியோருள்ளம். வீடணன் - விபீடணன். உறுதி - அடைக்கலம். சொன்னவன் - இராமன்.

54 அயன் - நான்முகன். அவனுக்கு உலகத்தில் கோயில் இல்லை. அவன் செருக்கால் தன்னை மறந்து சிவனுக்குப் பெருமையை மறுத்தல்.

55 மங்குல் - மேகம். மாறன் - பாண்டியன். மேகத்தைப் பாண்டியன் விலங்கிட்டதைத் திருவிளையாடலிற் காண்க.

56 தாதை - கம்சன் தந்தை; உக்கிரசேனன். தேவகி - கம்சனின் தங்கை. கண்ணன் தந்தை-வசுதேவன். யாவரையும் சிறைவைத்துத் தங்கை பிள்ளைகளைக் கொன்ருன்.

57 துரோபதை விராடபுரத்தில் வண்ணமகளாக இருந்தாள். கீசகன் காதலித்தான். அவன் வீமனுல் கொல்லப்பட்டான்.

58 முப்புரம் - மூன்று கோட்டை. இரும்பு, வெள்ளி, பொன்னுலாகிய வானத்தியங்குங் கோட்டை. சிவபெருமான் அவற்றை நகைத்து எரித்தருளினன். சிவபூசையைக் கைவிடாத மூவரையுங் காத்தனன். மூவராவார் நல்லொழுக்கினன், நற்பண்பன், நல்லறிஞன். இவர்கள் சிவன் திருக்கோவிலில் குடமுழா முழக்கும் பணியும் வாயிற் காவற் பணியும் புரிபவராயுள்ளார்.

59 சுகன், சாரன் என்னும் இருவரும் இராவண னுடைய ஒற்றர்கள்; குரங்கு வடிவு கொண்டு இராமர் படையுள் புகுந்தனர். உளவு பார்த்தனர். விபீடணன் செய்த மந்திரத்தால் உண்மை வெளிப்பட்டது. இராம பிரான் அவர்கள்பால் இரக்கங் காட்டித் தன் வரவை இரா வணனுக்குச் சொல்லுமாறு விடுத்தனன்.

60 கண்ணனால் கொல்லப்பட்ட நரகாசுரன் கேட்டுக் கொண்டபடி கண்ணனால் ஏற்படுத்தப்பட்ட நரசதுர்த்தசி அல்லது தீபாவளிப்பண்டிகை ஐப்பசித் திங்களில் நடக்கின் றது; அன்று தலைமுழுகுவோர் கங்கையில் முழுகிய பயனை யடைவர்.

61 மாற்றுந்தாயால் கடியப்பட்ட துருவன் தந்தை யின் ஒவ்வா நிலையையுங் கண்டனன். தன் தாயின் சொற் படி திருமாலை நோக்கித் தவம் புரிந்து துருவ நிலையை அடைந்தான்.

62 இராமருக்கு வாய்த்த தம்பி இலக்குமணன் போல் உலகில் எவருமிலர் என்று சொல்லும்படி இலக்குமணன் பணிபுரிந்தனன்.

63 இரணியன் தன் மகன் பிரகலாதனுக்கு இழைத்த கடுமையான பல துன்பங்களையும் அவன் துரும்பாக மதித்து உய்ந்தான்.

64 யாளி என்பவன் மாண்ட அரசன் மனைவியர் ஆயிர வரையுங் கூட எண்ணினான். அரசனுடலில் தன்னுயிரைப் புகுத்தினன். இதையறிந்த அமைச்சன் யாளியினுடலைத் தீயிலிட்டனன். யாளி அரசனுடலோடே இருந்தனன்.

65 மார்க்கண்டேய முனிவர் சிவபூசை செய்தனர். சிவபெருமானால் என்றும் பதினாறென வாழ்வு பெற்றனர்.

66 சிந்து நாட்டு மன்னன் தன் மகன் தலையை நிலத் திலே போட்டவன் தலையறுக வென்று நீரில் நின்று செபஞ் செய்தான். இதனையறிந்த கண்ணன் அருச்சுனனுக்குச் சொன்னான். அருச்சுனன் அவன்றலையை அம்பாற் கொய் தான். தொடுத்த அம்புகளால் அத்தலையைச் சிந்து நாட்டு மன்னன் கையில் புகுமாறு செய்தான், அம்மன்னன் தருப் பிக்கு முறையில் அத்தலையினைக் கீழே போட்டான். அவனும் தலை வெடித்து மாண்டான்.

67 சுமந்தினி என்பவள் தன் கணவன் இறவாதிருக்க வேண்டி மறையவர்க்குத் திருவமுதிட்டு வந்தனள். ஒருநாள்

அந்தணர் இருவர் ஆண் பெண்கோலம் கொண்டு வந்திருந் தனர். அந்நங்கை அவ்விருவரையும் சிவனும் சிவையுமாகப் பாவித்து வழிபாடு செய்தாள். அப்பாவனைத் திறத்தால் பெண்ணுரு பெண்ணுகவே மாறிவிட்டது. அது மட்டுமன்று. ஆண்மகன் என்பதும் மறந்து அவனைக் கூடவும் முயன்றனன்.

68 சயந்தன் என்பவன் சீதையின் மார்புக் கச்சை அவிழ்க்க வெண்ணி காகவுருக் கொண்டுவந்து கோதினன். இராமர் அம்பு கொண்டெய்தனர். பின் இரக்கப்பட்டு இரு கண்ணுக்கும் ஒரு மணி என அருளினர்.

70 காவிரியாற்றின் சுழிவழியாகப் பொன்னி நாட்ட ரசன் போனுன். அங்கு ஏரண்ட முனிவனைக் கண்டான். அவன் சொற்படி அரசன் அங்கு வீழ்ந்திறந்தான். ஆற்றுப் பெருக்கு நின்றது. முனிவனும் பழிநீங்க இறந்தான்.

72 பரசமய கோளரியாகிய திருஞானசம்பந்தப் பெருமானுர் திருமுன் கொடிய அமணர்கள் தங்கள் நிலையறியாது நின்று ஆற்றலழிந்தனர்.

73 தென்கூடற்கண் முத்தமிழ்ச் சங்கத்தவரைத் திருவள்ளுவ நாயனுர் தம்முடைய சிறந்த திருக்குறளால் மகிழ்வித்தனர்.

74 இந்திரனமைத்த நந்தவனத்துக்கு நீர் வேண்டு மென்று மூத்த பிள்ளையார் காக்கையுருக்கொண்டு அகத்திய முனிவர் நீர்க் கரகத்தைக் கவிழ்த்தார். அந்நீர் பெருகிக் காவிரியாருக வளந்தந்து திகழ்கின்றது.

75 முதற் குலோத்துங்க சோழனின் அமைச்சர் தலை வனும் படைத் தலைவனுமாய்த் திகழ்ந்தவன் கருணுகரத் தொண்டைமான். இவன் தன் மன்னனின் ஆணையின்படி கலிங்கப் போரை நடத்தி வென்றி கொண்டான்.

76 உக்கிர குமார பாண்டியன் மேருவைச் செண்டா லடித்துப் பொருள் பெற்றனன்.

77 பத்திராயு மன்னன் மகதர் கோமானையும் அவன் மைந்தனையும் சிறைப்படுத்தித் தன் தந்தையின் சிறையை நீக்கினுன்.

78 உள்ளத் துறுதியும் உரனும் நீங்காத அரவான் களப் பலியாயினன்.

79 கண்ணன் தன் இளமை நட்பாங் குசேலர் செல்வ வளத்துடன் வாழவுன்னி அவர் கொண்டுவந்த சிற்றுண வாகிய அவலை உண்டு மகிழ்ந்தனன்.

80 துருபத மன்னன், துரோணர்க்குரைத்தபடி செய்யாமையால் அருச்சுனனால் தேர்க்காலில் கட்டுண்டான்.

81 துரியோதனன் மனையாள் கன்னனுடன் சூது விளையாடினாள். மன்னன் வரக் கண்டெழுந்தாள். கன்னன் முந்தியைப் பிடிக்க, முத்துச் சிந்தியது. துரியோதனன் முத்தினைக் கோக்கவோ பொறுக்கவோ என்றனன்.

82 சீதை மாயமானைப் பொன் மானென்று எண்ணிய தால் நேர்ந்த துன்பம் அளவிடற்கரியது.

83 கம்சனால் விடப்பட்ட பூதனை தாய் வடிவுகொண்டு சென்று கண்ணனைத் தன் பால் கொடுத்துக் கொல்லத் துணிந் தாள். இதனையறிந்த கண்ணன் அப்பேய் வடிவின் முலைக் காம்பில் வாய்வைத்துப் பால் குடிப்பான் போன்று உயிரைக் குடித்துக் கொன்றனர்.

86 வயின தேயனெனப்படும் கருடன் அமிழ்தங் கொண்டுவந்து தன் தாயின் அடிமையை நீக்கினன். அவனைப் போரில் வெல்ல முடியாதென்றெண்ணி மால் வரம் வேண்டினன். அவனும் ஈந்தனன். அவ்வரம் தன்னைச் சுமக்க வேண்டும் என்பதே. அப்படியே சுமக்கலாயினன்.

84 பஸ்மாசூரன் சிவபெருமான் மாட்டுத் தான் யார் தலைமேல் கைவைத்தாலும் அவர் மாளவேண்டுமென்று வரம் பெற்றனன். சிவன் தலையிலேயே கை வைக்கத் துணிந் தனன். சிவன் மறைந்தனன். மால் செய்த வஞ்சனையால் அவன் தன் தலைமேல் கைவைத்து மாண்டனன்.

85 மாலின் காதுக் குறும்பியினின்றும் மது கைடவ ரென்னுமிருவர் தோன்றினர். மாலுடன் சண்டையிட் டனர். மால் தோற்றனன். வஞ்சனையால் கொல்லக் கருதி 'வரந் தருகின்றேன் கேள்' என்றனன். அவர்கள் சிரித்து நாங்கள் தருகின்றோம் கேள் என்றனர். மாலும் தன் கையால் அவர்கள் மாள வேண்டுமென்று வரம்பெற்று அவர்களைக் கொன்றனன்.

87 ஐந்து கரப் பிள்ளையாரென்றறியாது மறையவ னென்று எண்ணி, மறையவன் தலையிற் குட்டினன் ஓர் அரக் கன். பின் உண்மை தெரிந்து பணிந்து வேண்டினன்.

அவரும் உன்னுடைய கையால் உன் தலையில் குட்டித் தோப்புக் கரணம் போடெனப் பணித்தனர். அவனும் அவ்வாறே செய்தனன். இங்ஙனம் செய்வார்க்கென்றும் மகிழ்வேன் என்றருளினர்.

88 ஐங்கரப் பிள்ளையாரை அவர்தம் திருவுருவ வேறுபாடு கண்டு அம்புலியாகிய திங்கள் நகைத்தனன். பிள்ளையாரும் நீ நகைத்த இந்நாளாகிய ஆவணித் திங்கள் சதுர்த்தியில் உன்னைக் காண்பார் பாவமும் பழியும் எய்துவர் என்று சாபமிட்டார்.

89 சம்பரன் தனக் கிறுதி மதனன் ஒருவனாலன்றி வேறு எவராலும் நேரலாகாதென்று வரம் பெற்றனன். பெற்ற பின் இரதியைச் சமையற் பெண்ணாக அமைத்து, மன்மதனைக் கல்லொடு பிணித்து நடுக்கடலில் வீழ்த்தினன். அவனை ஒரு மீன் விழுங்கிற்று. விழுங்கிய மீனைப் பிடித்த வலைஞர் சம்பரனிடமே கொடுத்தனர். அவன் கறி சமைக்கப் பணித்தனன். சம்பரனை மன்மதன் வெளிப்படையாக வந்து பொருது கொன்றனன்.

90 அகத்திய முனிவருள்ளிட்ட ஐம்பது முனிவர்கள், ஒருகால் வரமுனிவரிடத்து வந்தனர். வரமுனிவர் தம் வரமேன்மையால் இவர்களை மதியாதிருந்தனர். முனிவர்கள் வெகுண்டு எங்களை மதியாதிருந்தமையால் நீ எருமைக் கடாவாக ஆகுக என்று சபித்தனர். அம் முனிவன் இரந்து வேண்டினன். முனிவர்கள் இரங்கி நீ எருமை முகத்துடன் தோன்றி உமையம்மையாரால் கொல்லப்பட்டுச் சிவகணத்துளாவாய் என்றனர்.

91 அமித்திர முனிவன் உண்ணுதற்குரிய நெல்லிக் கனியைத் துரோபதை கண்டு விரும்பினள். அருச்சுனன் அதனைக் கீழே விழும்படி செய்தனன். இதனை உணர்ந்து முனிவன் சாபம் ஏற்படுமென்று கூறி யாவரும் வருந்தினர். கண்ணன் கூறியபடி ஐவரும் தத்தம் மனக் கருத்தையுமுரைத்தனர். பழமும் சிறிது சிறிதாக உயர்ந்தது. ஆறுவதாகத் துரோபதை கூறியவுடன் பழம் பொருந்திற்று.

92 மறைந்திருந்த காளிதாசன் விலைமாதர் வலைப் பட்டமையால் அவள் விரும்பியபடி ஒரு பாட்டு எழுதிக் கொடுத்தனன். அவள் அதனை அரசனுக்குக் கொடுத்துப் பெரும் பொருள் பெற்றாள். மன்னன் காளிதாசன் இருக்கை யறிந்து அவனைக் கொன்றனன்.

93 குருவின் மகனைக் கொன்று கள்ளுடன் கொடுத்து உண்பித்தனன். இதனை அறிந்த வெள்ளி சாபமிட்டனன்.

94 பொல்லாச் சூது ஆடிய குற்றத்தால் வேந்தன் நளனும் அவன் மனைவி தமயந்தியும் காடுசென்று படாத துன்பப்பட்டனர்.

95 பட்டினத்தடிகள் உண்டு மிஞ்சியதைப் பத்திர கிரியாரால் பெற்ற ஒரு நாய் மறுபிறப்பில் காசி மன்னன் மகளாய் முன்னினைப்புடன் பிறந்தனள். பத்திரகிரியார் பால் வந்தனள். பத்திரகிரியாரின் வேண்டுகோளின்படி பட்டினத் தடிகள் அவளைச் சிவனடி சேர்ப்பித்தனர்.

96 தந்தையாகிய சந்தனு மறுமணம் புரிந்து வாழும் பொருட்டு மகன் வீடுமன் தான் மணம் புரியா விரதம் பூண் டிருந்தனன்.

97 சீதையைக் காக்கும் பொருட்டுச் சடாயுவேந்தன் இராவணனோடு போரிட்டு மாண்டனன். எருவை - கழுகு.

98 சதகண்ட முனிவன் திருமாலை நோக்கிப் பெருந் தவம் புரிந்தனன். திருமால் தோன்றி வேண்டியதைக் கேள் என்றனர். அவன் நான்கு ஊழியிலும் நீ எனக்கு மகவாக வருதல் வேண்டுமென்றனன். அம்முறையே சமதக்கினி ரேணுகையாகவும், கோசலை தசரதனாகவும் வசுதேவன் தேவகியாகவும் அம்முனிவனும் அவன் மனைவியும் பிறக்கத் திருமாலும் முறையே பரசுராமர் தசரதராமர், கண்ணன் எனப் பிறந்தனர். இனி நான்காம் ஊழியிற் பிறப்பர்.

99 தாருகாவனத்து முனிவர் முன் செய்த பிழை களைத் திருவுளங்கொள்ளாது சிவபெருமான் அருள் சேரும் படி திருகூத்துக் காட்சி கொடுத்தருளினன்.

100 திங்களாகிய சந்திரன் தன்பாலுள்ள முயலைப் பாம்பு பற்றவந்து தன்னையும் பற்றுகின்றது தெரிந்தும் அம் முயலை நீக்கவில்லை. பாந்தள் - பாம்பு.

101 விசயனும், கண்ணனும் தன்பால் வந்த காலத் துச் சிறப்புச் செய்யாத மறையவனிடம் பெருஞ் செல்வ மிருந்தும் பயன் பெறுமல் போய்விட்டது.

102 தாருகாவனத்து முனிவர் மனைவியர்க்குத் தெய்வ நாட்டம் உண்டாகும் பொருட்டுச் சிவபெருமான் அவர் களிடம் பிச்சைக்குச் சென்றனன்.

103 பகீரதன் பெருந்தவம் புரிந்து கங்கையை நிலவுலகத்தே வரச்செய்து தன் முன்ஞேரை ஈடேற்றினன்.

104 வள்ளி நாய்ச்சியார் தினைப்புனங் காத்தனள். இது வேளாண்மைக்கண் பயிர் காக்குஞ் சிறப்புக் கூறப்படுவதாகும்.

105 பரீக்ஷித்து மன்னனைத் தீண்ட எண்ணியிருந்த தக்ககனென்னும் பாம்பை அது செய்யவொட்டாது தடுப்பேனென்று காசிப மறையோன் இருந்தனன். அப்பாம்பு அம் மறையோனுக்குத் தன் பெரிய மணியைக் கொடுத்துப் போகச் செய்தது. பின் பரீக்ஷித்தைக் கடித்தது.

106 திருமால் மாவலிபாற் சென்று மூவடி மண் இரந்தமை குறிக்கப்படுகின்றது.

107 கண்ணன், வீமன், அருச்சுனன் ஆகிய மூவரும் மாறுகோலங் கொண்டு சராசந்தனிடம் சென்று இரந்தனர். அவன் இவர்களை அடையாளங் கண்டு கொண்டனன்.

108 இராமன் சேதுவை கட்டுதற்குக் கடலரசனைக் குறித்து ஏழுநாள் தவம் புரிந்தான். கடலரசன் வரவில்லை. பின் சீற்றங்கொண்டு அம்பு எய்தனன். வாரி - கடல்.

109 அசுரர்கள் மோகினியைக் கண்டு மயங்கினர்; அமுதம் உண்பதை மறந்தனர்.

110 சுந்தரரும், பரவை நாய்ச்சியாரும் திருவருளால் கண்ட குறிப்பினுல் காதல் மணம் கொண்டனர்.

111 அருச்சுனன் சுபத்திரையின் காதல் நோக்கால் காமத்தீ அடைந்தனன்.

112 நகுடன் என்பவன் தான் செய்த வேள்விப் பயனுல் இந்திர நிலையை எய்தினன். இந்திராணியின் நலம் நுகர விரும்பினன்.

113 விபசித்து தம் காதன் மனைவியை இழந்தமையான் வருந்தி விருத்தாசலத்து வந்து வழிபட்டுப் பேறு பெற்றுர்.

114 சீதை விரைவாக வந்தும் இராமனுடைய உள்ளத்தை ஆராய நோக்கியிருந்தனள்.

115 மாயை என்பவள் அல்லமனைச் சேர வருந்திஞள். அவள் தோழி விலாசி என்பவள் அவளுக்குச் சூழ்ச்சி கூறிஞள். அவளும் மகிழ்ந்தாள்.

116 சீதை இராமரைப் பிரிந்திருக்க முடியாமையினுல் அவருடன் செல்வதற்கரிய காடு சென்ருள்.

117 திருமாலின் ஒருநாட் பிரிவைத் தாங்க முடியாது கோபியர்கள் மிக வருந்தினர். திருமால் - கண்ணன்.

118 தமயந்தி நளனைக் கனவிற்காண்கின்ருள். ஆனுல் விழித்தவுடன் காணவில்லை. அதனுல் வருந்தினுள்.

119 பிரத்தியும்நன் மகன் அநிருத்தன். வாணுசுரன் மகள் உஷை. உஷை அநிருத்தனைக் கனவிற் கண்டாள். கலந்தாள், பின்னவனை அவன் படுத்திருக்கும் கட்டிலோடு கொண்டு வரச்செய்து கூடிக் களித்தாள். மஞ்சம் - கட்டில்.

120 கண்ணன் கோபியரைவிட்டு ஒருமுறை பிரிந்தான். பிரிவினுல் வருந்திக் கண்ணனே எம்முன் வந்து, ஒரு மொழி புகல்வாயாக என்றனர்.

121 சந்தனுவேந்தன் கங்கையைப் படத்திலெழுதிப் பார்த்து வருந்தினன்.

122 துயிலும்போது இரத்தின சூடன் என்னும் நாக அரசன் இரத்திணுவல்லியை அணைந்தான். சித்திர ரேகை என்னும் தோழி எழுதிய படங்களுள் இரத்தினசூடன் படமும் இருந்தது. அதனுல் அவள் காமுற்றது இரத்தின சூடன் என்று அறிந்தனர்.

123 பிங்கலையென்பவள் கணவனைத் தேடிக் காணுமையினுல் வருந்தினுள்.

124 அருச்சுனன் தேவ உலகத்துச் சென்றிருந்தான். ஊர்வசி அவனைக் காமுற்ருள், அவன் மறுத்தான். அவள் அவனைப் பேடியாகக் கடவை என்று சபித்தாள்.

125 அழகிய உருக்குமணி கண்ணன் என்ருவது தன்னை மணந்து கொள்வானென்னும் உறுதி கொண்டிருந்தாள்.

126 தாருகாவனத்து முனிவர். பன்னியர் பிச்சைக் கோலத்துடன் வந்த பெருமானைக் கண்டு கற்பைக் கைவிட்டனர்.

127 சீமந்தினி என்பவள் தன் கணவனை யிழந்து திங்கட்கிழமை நோன்பினுல் மீண்டும் பெற்றனள்.

128 தரும குத்தன் என்னும் வேந்தன் மகன் பிரதோஷ பூசை புரிந்தனன். அதன் பயனுகக் கந்தருவப் பெண்ணை மணந்துகொண்டான்.

129 இந்திரன் அகலியையைக் கவுதம வுருவத்துடன் வஞ்சனையாகச் சென்று கூடினன். இதையறிந்த கவுதமர் இந்திரன் உடல் முழுவதும் பெண் குறியாக வென்று சாபமிட்டனர்.

130 கண்ணபிரானைப் பிரிந்த கோபியர் தம் நெஞ்சை நோக்கி வருந்திக் கூறியது.

131 சத்தியபாமை பாரிசாத மலரைத் தனக்குத் தரவில்லையென்று கண்ணனுடன் ஊடினள். கண்ணன் பாரிசாத மரத்தையே கொண்டுவந்து கொடுத்தனன்.

132 நளன் இப்பிறப்பில் பிரியேனென்று கூறினன். அதைக் கேட்டுத் தமயந்தி அழுதனள்.

133 தெய்வயானையின் கணவனாகிய முருகக் கடவுள் மான் மகளாகிய வள்ளிநாய்ச்சியாருடன் ஊடி வேங்கை மரமானன்.

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

[எண்: செய்யுளெண்]